**செய்தி வெளியீடு எண்: 594** **நாள்: 09.10.2012**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (9.10.2012) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டம் – ஒரத்தநாட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் துவக்கி வைத்தார்கள். மேலும், திருநெல்வேலி கால்நடை மருத்துவமனை வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தையும் துவக்கி வைத்தார்கள்.

சிறந்த கால்நடை மருத்துவர்கள் உருவாக்கப்பட்டால் தான் கால்நடைகளுக்கு தரமான மருத்துவ வசதியை அளிக்க இயலும் என்பதை கருத்தில் கொண்டு, தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், இராமையன்பட்டியில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில், மாவட்ட கால்நடைப் பண்ணை வளாகத்தில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க தமிழ்நாடு அரசு 177.92 ஏக்கர் நிலத்தை வழங்கி, கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட செலவினங்களுக்காக 16 கோடியே 34 லட்சம் ரூபாய் அளித்திட ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் கல்லூரிக்கு முதல்வர் மற்றும் 38 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, முதலாமாண்டு பட்டப்படிப்பில் 40 மாணவ, மாணவிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். இப்புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள்.

திருநெல்வேலி மாவட்டம், இராமையன்பட்டியில் 139.21 ஏக்கர் நிலம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட செலவினங்களுக்காக 12 கோடியே 59 லட்சம் ரூபாய் அனுமதித்து அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் கல்லூரிக்கு முதல்வர் மற்றும் 32 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, 40 மாணவ, மாணவிகளுடன் முதலாமாண்டு வகுப்புகளை திருநெல்வேலி கால்நடை

மருத்துவமனை வளாகத்தில் துவக்க அரசால் அனுமதி அளிக்கப்பட்டு வகுப்புகள் மற்றும் ஆய்வக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.இப்புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ள இந்த கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், தமிழகம் முழுவதும் தேவைப்படும் தகுதி வாய்ந்த கால்நடை மருத்துவப் பட்டதாரிகளை கூடுதலாக உருவாக்க உதவுவதோடு, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஆடு வளர்ப்பு உள்ளிட்ட கால்நடை வளர்ப்பு சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட பெரிதும் பயன்படும்.

தமிழக அரசின் கால்நடை மேம்பாட்டிற்கான திட்டப் பணிகள் சிறப்பாக நடைபெறவும், கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்குச் சிறந்த மருத்துவச் சேவை அளித்திடவும், துறை அலுவலர்கள் மேம்பட்ட கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும், 1 கோடியே 77 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 29 புதிய ஜீப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழக அரசின் மீன்வளத் திட்டப்பணிகளை விரைந்து செயல்படுத்திடவும், மீன்பிடி துறைமுகப் பணிகளைச் செவ்வனே ஆய்வு செய்வதற்கும், மீனவக் கிராமங்களில் விரைந்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளவும் 1 கோடியே 14 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய 19 ஜீப்புகள்; தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் 18 லட்சம் ரூபாய் செலவில் 2 நடமாடும் மீன் விற்பனை நிலையங்களுக்கான ஊர்திகள் மற்றும் மீன் வளத்துறை மூலம் 90 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 11 நடமாடும் மீன் விற்பனை நிலையங்களுக்கான ஊர்திகள், என மொத்தம் 2 கோடியே 22 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் 32 புதிய ஊர்திகளை மீன்வளத்துறைக்கு வழங்கினார்கள்.

ஆவின் நிறுவனத்தில் பணியின் போது உயிரிழந்த ஊழியர்களின் 56 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 9.10.2012